## தலைப்பு 161 – வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 18 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 மே 17 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

------------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அருகிச் செல்லும் அச்சுறுத்தலுக்கு உட்படுகின்ற விலங்குகள் மற்றும் விஷேட மரங்கள் தொடர்பான கூட்டமைப்பின் தரப்பினர்களின் மாநாட்டிற்காக (CITES) கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சிலிருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 4,370,862 ஆக இருந்த போதிலும், கணக்குகளில் | தொழில்நுட்ப கோளாரின் காரணமாக சொத்துக்களை சரியாக உள்ளடக்குவதற்கு முடியாதிருந்ததுடன், கையேற்கப்பட்ட சகல சொத்துக்களும் எதிர்வரும் ஆண்டின் போது உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | கையேற்கப்பட்ட சகல நிலையான சொத்துக்களையும் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அப்பெறுமதி ரூபா 3,650,630 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 720,232 தொகை குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு இராஜாங்க அமைச்சிற்கு மாற்றப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,590,833 ஆக இருந்த போதிலும், சொத்து மாற்றல்களின் பெறுமதி ரூபா 1,736,353 ஆக ரூபா 145,520 தொகை அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்வதுடன், பதிவிடும் போது ஏற்பட்ட வழுவாக இருந்ததை அறியத்தருகின்றோம். | மாற்றப்பட்ட சகல நிலையான சொத்துக்களையும் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புக்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | இழப்புக்கள் தொடர்பான பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 50 இற்கு இணங்க வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சினால் 2020 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் 04 செலவின விடயங்களில் 41 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்புக்கள் அவதானிக்கப்பட்டது. | கட்டுநிதி கிடைக்கப் பெறாமை, தேசிய பாதீட்டு சுற்றறிக்கையை பின்பற்றுவதற்கு ஏற்பட்டமை மற்றும் அமைச்சரவையில் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் செயற்பட்டமை போன்றதன் காரணமாக இந்த சேமிப்புக்கள் ஏற்பட்டது என அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான திட்டமொன்றுடனும் முகாமைத்துவத்துடனும் கூடிய மதிப்பீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அருகிச் செல்லும் அச்சுறுத்தலுக்கு உட்படுகின்ற விலங்குகள் மற்றும் விஷேட மரங்கள் தொடர்பான கூட்டமைப்பின் தரப்பினர்களின் மாநாட்டிற்காக (CITES) ரூபா 87.9 மில்லியன் கிரயமான வளிப்பதனாக்கி மற்றும் தற்காலிக கட்டிட மேவுகை (Marquee) வாடகைக்கு பெறப்பட்டிருந்து. அதற்காக 2019 ஏப்ரல் மாதத்தில் வழங்குனருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்துடன், 2019 யூலை மாதத்தின் போது அதில் ரூபா 20 மில்லியன் முற்பண தொகை செலுத்தப்பட்டிருந்தது. செலுத்துவதற்கு எஞ்சியருந்த ரூபா 67.9 மில்லியன் தொகை நிதிக் கூற்றுக்களில் கடப்பாடுகளின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முழு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணம் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படாதிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்க முடியாதிருந்தமையை அறியத்தருகின்றோம். | பணம் செலுத்துதல் தொடர்பாக வழங்குனருடன் தீர்மானத்திற்கு உடன்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கட்டுப்பாட்டிற்காக உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் ஆக்கபூர்வமான தன்மையை மீளாய்வதற்கான முன்மொழிவுகளை தயாரித்தல் பிரதான உள்ளக கணக்காய்விற்கு கையளிக்கப்பட்டுள்ளது. அந்த முன்மொழிவுகளின் பிரதியொன்று எதிர்காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (அ) நிதிப் பிரமாணம் 104(4) | இழப்பு நட்டங்கள் ஏற்பட்ட தினத்தில் இருந்து 03 மாதங்களுக்குள் பூரண அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 10 வாகன விபத்துக்கள் தொடர்பாக விபத்துக்கள் ஏற்பட்டு 05 மாதங்களுக்கும் 04 வருடங்களுக்கும் இடையிலான காலம் கடந்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தாமதம் ஏற்பட்டிருந்ததை ஏற்றுக்கொள்வதுடன், எதிர்காலத்தில் இவ்வாறான தாமதங்களை தவிர்த்துக்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) நிதிப் பிரமாணம் 753 | களஞ்சியத்தில் இருந்து கிளைகளுக்கு பொருட்களை விநியோகிக்கும் போது விநியோகிக்கின்ற உத்தியோகத்தரினால் பொது 141 மாதிரி படிவத்தில் விநியோகிக்கும் கட்டளையும், பொருள் கிடைத்தமைக்கு அந்த பொருட்களை கையேற்ற உத்தியோகத்தரினால் பொது 219 மாதிரி படிவத்தில் பெறுகைக் கட்டளையும் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | நிதிப் பிரமாணம் 1642 | திணைக்களத்திற்குரிய வாகனங்களை பயன்படுத்துகின்ற உத்தியோகத்தரினால் அல்லது உத்தியோகத்தர் இன்றிய சந்தர்ப்பத்தில் சாரதியினால் மேற்கொள்ளப்படுகின்ற சகல அவசர திடீர் விபத்துக்களும் அருகில் உள்ள பொலிஸிற்கு அறிவிக்க வேண்டியிருந்த போதிலும், 03 விபத்துக்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த தவறுகள் இடம் பெறாமைக்கு கண்காணித்துக் கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். | -மேற்படி- |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வாகன விபத்துக்களுக்குரிய ரூபா 2,855,858 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. அந்த நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்க வேண்டிய நட்டம் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றில் அந்த நட்டம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | கைத்தவறினால் வருடாந்த நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் , எதிர்காலத்தில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். | வாகன விபத்துக்குரிய நட்டம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவ நலிவுகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உடன்படிக்கையின் பிரகாரம் ஜெனீவாவில் அமைந்துள்ள அருகிச் செல்லும் அச்சுறுத்தலுக்கு உட்படுகின்ற விலங்குகள் மற்றும் விஷேட மரங்கள் தொடர்பான கூட்டமைப்பின் பங்குபற்றுனர்களின் செயலாகத்தினால் அ.டொ. 517,235 தொகையொன்று இலங்கைக்கு செலுத்த வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த பணத்தை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது. | இந்த பணத்தை மீளபெற்றுக் கொள்வதற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ஊடாக ஐக்கிய நாடுகளின் ஜெனீவா அலுவலகத்திற்கு மீள் நினைவூட்டல் பல தடவைகள் அனுப்பப்பட்டிருந்ததுடன் அது நைரோபி நகர அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதையும் அறியத்தருகின்றோம். | இந்த பணத்தை விரைவாக அறவிடுவற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வாகனங்களை சேர்விஸ் செய்யும் போது 20,000 கிலோ மீற்றர் ஓடியதன் பின்னர் டீசல் பில்டர் மற்றும் எயார் கிளீனர் மாற்றப்பட வேண்டியிருந்தமையும், 5,000 கிலோ மீற்றர் ஓடியதன் பின்னர் ஒயில் பில்டர் மாற்றப்பட வேண்டி இருந்தமையும் இயந்திர பொறியியலாளரினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எனினும், டீசல் பீல்டர் மாற்றுவதற்காக 10 சந்தர்ப்பங்களின் போது குறித்துரைத்த தூரத்தை விட 8,301 கிலோ மீற்றர் முதல் 30,290 கிலோ மீற்றர் வரையான தூரம் மேலதிகமாக ஓடியதன் | இந்த வாகனங்கள் கொவிட் செயலாற்றல் படையணிக்கு தேவையான சேவைகளை நிறைவேற்றுவதற்காகவும் தேர்தல்கள் கடமைகளுக்காகவும் கையளிக்கப்பட்டமையினால் வாகனங்களை சேர்விஸ் செய்தல் குறித்துரைத்த பிரகாரம் மேற்கொள்ளாமைக்கு அமைச்சிற்கு கட்டுப்படுத்துவதற்கு முடியாதிருந்தமையை அறியத்தருகின்றோம். | பொறியியலாளரின் பரிந்துரைக்கு இணங்க வாகனங்ளை சேர்விஸ் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

பின்னர் சேர்விஸ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எயார் கிளீனர் மாற்றுவதற்காக 11 சந்தர்ப்பங்களின் போது 2,590 கிலோ மீற்றர் முதல் 45,365 கிலோ மீற்றர் தூர அளவு மேலதிகமாக ஓடியதன் பின்னர் சேர்விஸ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே ஒயில் பில்டர் மாற்றுவதற்காக 05 சந்தர்ப்பங்களின் போது குறித்துரைத்த தூரத்தினை விட 3,676 கிலோ மீற்றர் முதல் 17,590 கிலோ மீற்றர் வரையான தூரம் மேலதிகமாக ஓடியதன் பின்னர் சேர்விஸ் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4. மனித வள முகாமைத்துவம்

------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியின் போது அமைச்சில் ஒட்டுமொத்த பதவியணியினரில் 08 வெற்றிடங்களும், 10 மிகையும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | சிரேஷ்ட நிலையில் மிகையான பதவி 2021 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்டதுடன், இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலையில் மேலதிக பதவியணியினருக்குரிய பதவிகளுக்காக அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், வெற்றிட பதவிகள் தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கும், ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். | தேவையினை கவனத்தில் கொண்டு வெற்றிடப் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கும், மிகை பதவியணியினருக்காக அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |